அதிமுக பொது செயலாளர் கே.பழனிசாமி முன்னிலையில்

நெல்லைக்கு நிவாரண பொருட்கள் அனுப்பி வைப்பு

● மதுரை

நெல்லையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அதிமுக புறநகர் கிழக்கு மாவட்டம் சார்பில் பொதுச் செயலாளர் பழனிசாமி முன்னிலையில் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

தென் மாவட்ட வெள்ள சேதங்களை பார்வையிட, அதிமுக பொதுச் செயலாளர் கே.பழனிசாமி நேற்று காலை சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரை விமான நிலையம் வந்தார்.

அப்போது அவரிடம், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அதிமுக சார்பில், மாவட்டச் செயலாளர் ராஜன் செல்லப்பா எம்எல்ஏ ஏற்பாட்டில் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டன.

பின்னர், ரூ.15 லட்சம் மதிப்பிலான அரிசி, மளிகை பொருட்கள், போர்வை, பிஸ்கட் பாக்கெட், தண்ணீர் பாட்டில்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் ஏற்றப்பட்ட வாகனங்களை, கே.பழனிசாமி கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

↑ அதிமுக புறநகர் கிழக்கு மாவட்டம் சார்பில் நெல்லையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்களை அனுப்பி வைத்த அதிமுக பொதுச் செயலாளர் கே.பழனிசாமி.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், ஆர்.பி. உதயகுமார், செல்லூர் கே.ராஜு, மாநில தகவல் தொழில்நுட்பக் குழு செயலாளர் ராஜ் சத்யன், இளைஞர் அணி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரமேஷ், திருப்பரங்குன்றம் ஒன்றியச் செயலாளர் நிலையூர் முருகன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

மதுரை வைகை ஆற்றில் வெள்ளம்

● வேடிக்கை பார்க்கவோ, செல்ஃபி எடுக்கவோ கூடாது என எச்சரிக்கை

● மதுரை

வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், மதுரை வைகை ஆற்றில் இரு கரைகளையும் தொட்டபடி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

வைகை அணைக்கு கடந்த 17-ம் தேதி 1,811 கன அடி தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருந்தது. மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள மூலவைகை ஆறு, பெரியாறு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையால் பெரியாறு அணைக்கும், வைகை அணைக்கும் நீர்வரத்து அதிகரித்தது.

இந்நிலையில், அணைக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் காலை 17,197 கன அடியாக பல மடங்கு அதிகரித்தது. நண்பகல் 12 மணிக்கு உச்சபட்சமாக 24,558 கன அடி தண்ணீர் அணைக்கு வந்தது. உடனடியாக வைகை அணையிலிருந்து உபரிநீர் ஆற்றில் திறந்து விடப்பட்டது.

வெள்ள அபாய எச்சரிக்கையும் இரண்டு முறை விடப்பட்டது. தொடர்ந்து, நேற்று மாலை முதல் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் மழை குறைந்ததால், அணைக்கு நீர்வரத்தும் குறையத் தொடங்கியது. தற்போது, அணைக்கு 5,391 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் அணை நீர்மட்டம் 69.49 அடியை எட்டியது.

↑ மதுரை வைகை ஆற்றில் கரைபுரண்டு ஓடும் வெள்ளம். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

அணை நிரம்பியதால், நேற்று காலை மூன்றாவது முறையாக வைகை ஆற்றங் கரையோரம் தாழ்வானப் பகுதிகளில்வசிக்கும்மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. தற்போது, அணையிலிருந்து ஆற்றில் 3,169 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

வைகை அணையிலிருந்து நேற்று மூன்றாவது முறையாக தேனி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் எந்த நேரமும் திறந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளதால், ஆற்றில் குளிக்கவோ, துணிகளை துவைக்கவோ, வாகனங்களை கழுவவோ கூடாது. மேலும், கரையோரம் நின்று பொதுமக்கள் வேடிக்கை பார்க்கவோ, செல்ஃபி எடுக்கவோ வேண்டாம், என காவல் துறையினர் எச்சரித்துள்ளனர்.

நீண்ட காலத்துக்குப் பிறகு மதுரை வைகை ஆற்றில் இரு கரைகளையும் தொட்டபடி தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. இதை ஏ.வி.மேம்பாலம், யானைக்கல் மேம்பாலம், மாநகராட்சி உயர்மட்ட மேம்பாலங்கள், ஸ்மார்ட் சிட்டி சாலையில் வாகனங்களை நிறுத்தி பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக நின்று வேடிக்கை பார்க்கின்றனர்.

நகர் பகுதி ஆற்றங்கரையோரங்களில், கிராம நிர்வாக அலுவலர்கள், போலீஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். வைகை ஆறு ஸ்மார்ட் சிட்டி சாலைகளில் தற்காலிகமாக போக்குவரத்து மாற்றி விடப்பட்டுள்ளதால், நகர் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது.

ராஜீவ்காந்தி கொலையில் விடுதலையான

ஜெயக்குமாரை குடும்பத்தினருடன் தங்க அனுமதிக்க முடியாது

▶ உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்

● மதுரை

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையில் விடுதலையான இலங்கை நபரை சென்னையில் உள்ள குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ அனுமதிக்க முடியாது என உயர் நீதிமன்றத்தில் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து விடுதலையான பின்னர் திருச்சி முகாமில் அடைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஜெயக்குமார், உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனு:

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வந்தேன். உச்ச நீதிமன்ற உத்தரவால் 11.11.2022-ல் விடுதலையானேன். சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட என்னை திருச்சி கொட்டப்பட்டு இலங்கை தமிழர் முகாமில் 12.11.2022 முதல் காவலில் வைத்துள்ளனர். இந்த முகாம் சிறைவாசத்தைவிட மோசமாக உள்ளது. எங்களை முகாம் அறையிலிருந்து வெளியே வரவும், பிற கைதிகளுடன் பழகவும் அனுமதிப்பதில்லை. இதே நிலை தொடர்ந்தால் மன உளைச்சலுக்கு ஆளாக நேரிடும். என்னை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது மரண தண்டனைக்கு நிகரானது. நான் இலங்கை செல்ல விரும்பவில்லை. சென்னையில் வசிக்கும் எனது குடும்பத்தினருடன் தங்க அனுமதிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் முன் விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதி, குடும்பத்தினருடன் வசிக்க வேண்டும் என்ற ஜெயக்குமாரின் கோரிக்கை மீது தமிழக அரசின் முடிவு என்ன? சென்னை வியாசர்பாடியில் வசிக்கும் ஜெயக்குமாரின் குடும்பத்தினர் வீட்டில் அவரை காவலில் வைக்கலாமே? முகாம் காவலை திருச்சியில் இருந்து சென்னைக்கு மாற்ற முடியாதா? சென்னையில் குறிப்பிட்ட காவல் நிலைய எல்லைக்குள் அவரை நடமாட அனுமதிக்கலாமே? என கேள்வி எழுப்பினார்.

அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், ஜெயக்குமாரை சென்னையில் உள்ள குடும்பத்தினருடன் தங்க வைக்க அனுமதிக்க முடியாது.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக வந்ததால் திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளார். சிறப்பு முகாமை வேறு இடத்துக்கு மாற்ற இயலாது.

இலங்கையில் இருந்து வந்தவர் என்பதால் மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும். எனவே ஜெயக்குமாரை குடும்பத்தினருடன் தங்க அனுமதி அளிக்க இயலாது என்றார். இதையடுத்து மனு மீதான தீர்ப்பை ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

ரயிலில் கஞ்சா கடத்தியவருக்கு 10 ஆண்டு சிறை

● மதுரை

ஆந்திராவில் இருந்து மதுரைக்கு வந்த ரயிலில் கடந்த 2014-ம் ஆண்டில், மதுரை மாவட்ட போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு போலீஸார் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, ரயிலில் கஞ்சா கடத்தி வந்த உசிலம்பட்டியைச் சேர்ந்த லிங்கசாமி என்ற வைத்திய லிங்கம் (53) என்பவரை போலீஸார் கைது செய்தனர்.

அவரிடமிருந்து 90 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். இந்த வழக்கை, மதுரை மாவட்ட முதன்மை போதைப்பொருள் சிறப்பு நீதிபதி செங்கமலசெல்வன் விசாரித்தார். பின்னர், லிங்கசாமிக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.1 லட்சம் அபராதம் விதித்து நீதிபதி நேற்று உத்தரவிட்டார்.

நிவாரண பொருட்கள் அனுப்பி வைப்பு

● மதுரை

நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் கனமழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்தும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதன்படி மதுரை, திருச்சி, சேலம், ஈரோடு, நாமக்கல், கடலூர், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட நிவாரணப் பொருட்கள் மதுரை மாவட்ட நிர்வாகம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியர் சங்கீதா அறிவுறுத்தலின்பேரில், பிற மாவட்டங்களில் இருந்து சேகரித்த அனைத்து நிவாரணப் பொருட்களும் மதுரை வேலம்மாள் ஐடா ஸ்கட்டர் அரங்கில் வைத்து தனித் தனி பொட்டலங்களாக மாற்றப்பட்டன.

பின்னர், மதுரை விமான நிலையத்தில் இருந்து 2 ஹெலிகாப்டர்கள் மூலம் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இப்பணியில் வருவாய், ஊரக வளர்ச்சி, மாநகராட்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர்.

ரயில் முன் விழுந்து பள்ளி மாணவர் தற்கொலை

● வேடசந்தூர்

திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை அருகே மறவப்பட்டியைச் சேர்ந்த ராம கிருஷ்ணன் மகன் கோகுல நாதன் (16). இவர், எரியோடு கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 படித்து வந்தார்.

இவர் படிப்பில் கவனம் செலுத்தாமல் மொபைல் போனை பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தி வந்துள்ளார்.

இதனால் பெற்றோர் கண்டித்து வந்துள்ளனர். இந்நிலையில், நேற்று காலை மாணவர் தனது வீட்டில் மொபைல் போனை பயன்படுத்தியபோது, பெற்றோர் அதை பிடுங்கி வைத்துள்ளனர். இதையடுத்து, கோகுலநாதன் நேற்று காலை எரியோடு அருகே ரயில் முன் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து திண்டுக்கல் ரயில்வே போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நகரில் நடப்பவை

மதுரை

- சர்வதேச சர்க்கரை நோய் தினம், மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி, காலை 11.
- உலக மாற்றுத் திறனாளிகள் தினம், கயல் அரங்கம், மீனாட்சி அரசு கல்லூரி வளாகம், காலை 11.
- நர மதிப்பீட்டுக்குழு கூட்டம், கயல் அரங்கம், அரசு மீனாட்சி கல்லூரி வளாகம், காலை 11. சிறப்பு விருந்தினர்கள்: மேயர் இந்திராணி, டாக்டர் விஜயலட்சுமி.
- டெங்கு விழிப்புணர்வு பிரச்சாரம், கல்லூரி சுகாதார மையம், ஆரம்ப சுகாதார நிலையம், எஸ்.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, காலை 9.
- ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுக் கருத்தரங்கு, ஏற்பாடு-இ.சி.இ துறை, தியாகராசர் பொறியியல் கல்லூரி, காலை 10.
- மார்கழி திருப்பாவை - திருவெம்பாவை வழிபாடு, தெய்வநெறிக் கழகம், தலைமை-சுவாமி சிவானந்த சுந்தரானந்தா, மீனாட்சி கோயில், தெற்காடி வீதி, காலை 6.30.
- பகல் பத்து உற்சவம் 8-ம் நாள், கள்ளழகர் கோயில், சுவாமி புறப்பாடு, காலை 9. சுடலழகர் கோயில், சுவாமி புறப்பாடு, காலை 9. திருமோசுர் காளமேகப் பெருமாள், சுவாமி புறப்பாடு, காலை 10.
- அதிருத்ர மஹாயாகம் 3-ம் நாள், மதுரை மஹாருத்ர மஹாயக்ஞ குழு, லட்சுமி கந்தரம் ஹால், தல்லாகுளம், காலை 9.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

NAME CHANGE

I,Sekar, Son of Kulandaivel Hindu, aged about 40 years residing at 162, Arunachala Vinayakar Kovil Street, Puliyangudi Tenkasi District - 627855. shall Hence forth be known as Sekar Kulanthaivelu.

Sekar Kulandaivel

பொது

விற்பனை

CCTV CAMERA

எங்கிருந்தும் உங்கள் வீடு/ அலுவலகத்தை மொபைலில் பார்க்கலாம்

AN ISO 9001-2008 COMPANY

ஈஸிடெக் எலக்ட்ரானிக்ஸ்

இலவச டெமோவிற்கு அழைக்கவும்

74488 88901

95009 30200

www.easytechcctv.com

இந்து தமிழ் திசை

பொறுப்பாளர்: இந்த செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் பொருட்களை வாங்கும் நுகர்வோர் சரியானவைதானா என்பதை உறுதிபடுத்தி கொள்ளவும். விளம்பரங்களை நம்பி முன்பணம் செலுத்துவதோ, வேறு வகையிலான பரிவர்த்தனைகளோ மேற்கொள்ளும் முன் / தவறான தகவல்கள் / செயல்கள் உண்மையாகவே நம்பகத்தன்மை இல்லாத செய்தித்தாளில் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / இந்து என்கிற விமிடெட் உங்களுக்கு எவ்விதமான உதவியும் செய்ய இயலாது. இந்த செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களை நாளிதழ் தரப்பு ஏற்கும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளில் பேசுகின்ற நேயமைகளின் உண்மையான, பதிப்பாளர், தலையீடோ, ஆசியோ, இயக்குநரோ, ஊழியர்களோ ஆகிய நபர்களோ எந்த வகையிலும் அதற்கு பொறுப்பாளர்களாகமாட்டார்கள்.

பிரசுரிக்கப்பட்ட அனைத்து பிரிவு விற்றுமுதலுக்கொவ்வொரு அலுவலர், பிரசுரிக்கப்பட்ட நிறுவனம் அலுவலர் இவரது

மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: மஹிந்தரா டவர்ஸ், P K குர்னி சவ்க், வெர்லி, மும்பை-400 018, மஹாராஷ்ட்ரா, இந்தியா. Tel:+91 22 66523500, Email id: customercare.mrhfl@mahfin.com, Website – www.mahindrahomefinance.com

பிராந்திய அலுவலகம்: எண்.9/3, முதல் மற்றும் இரண்டாவது தளம், சக்தி எஸ்டேட்ஸ், 3வது தெரு, MG ரோடு, ஆலாந்துரை, கோயம்புத்தூர்-641006.

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

See rule 8(1) of the Security Interest (Enforcement) Rules, 2002

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச்சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest) Act, 2002-கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட M/s.மஹிந்திரா ரூரல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "MRHFL" என குறிப்பிடப்படுகிறது) பதிவு அலுவலக முகவரி: சதானா ஹவுஸ், 4-வது தளம், மஹிந்திரா டவர்ஸ், P.K குர்னி சவுக், வெர்லி, மும்பை-400 018, மஹாராஷ்ட்ரா இந்தியா மற்றும் கிளை அலுவலகம்: தேனி, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 3-ன்படி கீழ்குறிப்பிட்டுள்ள தேதிகளிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிட்டப் தொகையை அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழ் குறிப்பிட்டுள்ள கடன் பெற்றவர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன் பெற்றவர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்பெற்ற நபருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் வேறு விதியின்படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 14.12.2023 அன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடைமையாக்கி உள்ளார்.

இது முதற்கொண்டு கடன் பெற்றவர் மற்றும் பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது M/s.மஹிந்திரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்-க்கு வந்து சேர வேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும், அதற்கான வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடனுக்கு உடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஏற்றத்தங்களின் கீழ் கடன்தாரர்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

வரிசை எண்.1: கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்: Mr.G.தமிழரசன், Mrs.T.உமா; ஒப்பந்த எண்.XSEMTHE00850692; கோரிக்கை அறிவிப்பு தேதி: 11.01.2023; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: ரூ.11,56,001/- மற்றும் வட்டி.
அசையா சொத்து விபரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், கடமலைக்குண்டு சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, S.F.எண்.626, மேகமலை கிராமம் என்னும் முகவரியில் 924.0 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துணடுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: தெற்கு வடக்கு தெரு, மேற்கு: தெற்கு வடக்கு மெயின் ரோடு, வடக்கு: பொது கிணர் மற்றும் மாரிமுத்து மனை, தெற்கு: சிவன் காளை, ஆனந்தன் பொது வகை

வரிசை எண்.2: கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்: Mrs.கருப்பாயி, Mr.N.மயி; ஒப்பந்த எண்.XSEMTHE00892810; கோரிக்கை அறிவிப்பு தேதி: 11.01.2023; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: ரூ.7,35,988/- மற்றும் வட்டி
அசையா சொத்து விபரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், கடமலைக்குண்டு சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, S.F.எண்.658/4, மேகமலை கிராமம் என்னும் முகவரியில் 900.0 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துணடுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: M.பாண்டி காலி மனை, மேற்கு: ராஜாராம் காலி மனை, வடக்கு: ராக்கம்மாள் காலி மனை, தெற்கு: கிழக்கு-மேற்கு வழிப்பாதை - பெருமாள் கோயில்

வரிசை எண்.3: கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்: Mr.M.சுரேஷ், Mrs.M.அனிதா; ஒப்பந்த எண்.XSEMTHE00892694; கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.01.2023; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: ரூ.7,99,949/- மற்றும் வட்டி
அசையா சொத்து விபரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், கடமலைக்குண்டு சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, S.F.எண்.658/5, மேகமலை கிராமம் என்னும் முகவரியில் 1845.0 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துணடுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: காலி மாயன் காலி நிலம், மேற்கு: பள்ளி, வடக்கு பெருமாள் கோயில் மெயின் ரோடு, தெற்கு: வல்லக்கோடு காலி நிலம்.

வரிசை எண்.4: கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்: Mr.A.அக்கிம், Mrs.A.ஆஷிமா, Mr.A.அப்துல்காதர் ஜெய்னாலி; ஒப்பந்த எண்.XSEMTHE00740066; கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.01.2023; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: ரூ.11,70,568/- மற்றும் வட்டி.
அசையா சொத்து விபரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், பெரியகுளம்-II சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, பழைய நத்தம் S.F.எண்.2369/1, 2372/பகுதி புதிய நத்தம் S.எண்.2372/23, தேவதானம் கிராமம் என்னும் முகவரியில் 1368.0 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துணடுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: S.எண்.2373, தெற்கு வடக்கு ரோடு, மேற்கு: S.எண்.2372/22, ஆக்கல் வீடு, வடக்கு: 8 அடி அகல கிழக்கு மேற்கு வழிப்பாதை, தெற்கு: S.எண்.2372/28, நாகப் வீடு

வரிசை எண்.5: கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்: Mr.கருப்பாசாமி, Mrs.K.ஜோதி; ஒப்பந்த எண்.XSEMTHE00869760; கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.01.2023; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: ரூ.11,00,509/- மற்றும் வட்டி.
அசையா சொத்து விபரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், கடமலைக்குண்டு சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, S.F.எண்.714/3, மேகமலை கிராமம் என்னும் முகவரியில் 1616.0 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துணடுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: முருகன் மனை, மேற்கு: மாணிக்கம் மனை, வடக்கு: தர்மா மனை, தெற்கு: கிழக்கு மேற்கு காண்கிரீட் தெரு.

வரிசை எண்.6: கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்: Mrs.A.மலர்விழி, Mr.M.அழகர், Mr.A.தியாகர், Mr.C.பாலமுருகன்; ஒப்பந்த எண்.XSEMTHE00716381; கோரிக்கை அறிவிப்பு தேதி: 11.01.2023; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: ரூ.8,14,549/- மற்றும் வட்டி.
அசையா சொத்து விபரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், தேவாரம் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, S.F.எண்.921, தேவாரம் கிராமம் டவுன் பஞ்சாயத்து, போடிநாயக்கனூர், தேனி மாவட்டம் என்னும் முகவரியில் 481.0 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துணடுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: பெரியகருப்பன் வீடு, மேற்கு: சுந்தராஜ் வீடு, வடக்கு: மேன் தெரு, தெற்கு: தெரு

வரிசை எண்.7: கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்: Mr.A.சேலமுத்து, Mrs.S.ஜோதி; ஒப்பந்த எண்.XSEMTHE00739856; கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.01.2023; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: ரூ.4,87,954/- மற்றும் வட்டி
அசையா சொத்து விபரம்: பெரியகுளம் பதிவு மாவட்டம், ஆண்டிபட்டி சார்-பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, S.F.எண்.2515, புதிய நத்தம் S.எண்.6069/6B, 2528/26, திம்மரசநாயக்கனூர் கிராமம் என்னும் முகவரியில் 1368.0 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துணடுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: ராமராஜ் நிலம், மேற்கு: ஆவது நாயக்கர் வீடு, வடக்கு: ராமராஜ் நிலம் மற்றும் பொது தெரு, தெற்கு: வழிப்பாதை

வரிசை எண்.8: கடன்தாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்: Mrs.C.பாக்கியம், Mr.C.சின்னவேலு; ஒப்பந்த எண்.XSEMTHE00687847; கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.01.2023; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: ரூ.7,15,124/- மற்றும் வட்டி.
அசையா சொத்து விபரம்: திண்டுக்கல் பதிவு மாவட்டம், வத்தலக்குண்டு சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, S.F.எண்.1827/1A, தேவதானப்பட்டி கிராமம் என்னும் முகவரியில் 512.0 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துணடுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மொக்காம் வீடு, மேற்கு: அருவகம் வீடு, வடக்கு: ஆண்டி தேவர் வீடு, தெற்கு: கிழக்கு மேற்கு தெரு.

தேதி : 14.12.2023 மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

SBI பாரத ஸ்டேட் பாங்கு

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை, விநாயக நகர் கிளை முதல் தளம், எண்.6, அம்பேத்கர் சாலை, மதுரை - 625020.

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல், கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6)-ன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்கள் மற்றும் குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், பாரத ஸ்டேட் வங்கியின் கடன்தாரரான
1) M/s. ஸ்ரீ வன்னிதங்கம் கம்பெனி, கதவு எண்.115/3, பி.வி.எஸ்.சந்து, கீழமாசி வீதி, மதுரை-625001.
2) திரு.A.S.V.C.காளிதாசன், எண்.12A, ப்ரியா கார்டன், அய்யன் நகர், ஒத்தக்கடை, மதுரை-625018.
3) திருமதி.K.சௌந்திரவள்ளி, எண்.12A, ப்ரியா கார்டன், அய்யன் நகர், ஒத்தக்கடை, மதுரை-625018.
4) திரு.K.செந்தில்குமரன், எண்.12A, ப்ரியா கார்டன், அய்யன் நகர், ஒத்தக்கடை, மதுரை-625018.
5) திரு.K.சின்னக்கனிராஜா, எண்.12A, ப்ரியா கார்டன், அய்யன் நகர், ஒத்தக்கடை, மதுரை-625018.
6) திரு.M.பாலகிருஷ்ணன், எண்.2, கல்லறை 1-வது சந்து, மீனாட்சிபுரம், காமராஜர் சாலை, மதுரை-625009.
7) திரு.அருஞ்சுனைகுமார், எண்.12A, ப்ரியா கார்டன், அய்யன் நகர், ஒத்தக்கடை, மதுரை-625018.

ஆகியோரிடமிருந்து 12.12.2023 அன்று ரூ.41,39,510/- (ரூபாய் நாற்பத்தொன்று லட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து ஐநூற்று பத்து மட்டும்) + வட்டி மற்றும் பிற செலவினங்கள் சேர்த்து வங்கி வசூலிக்கும் பொருட்டு, பாரத ஸ்டேட் வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்கள் "எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ", "எந்நிலையில் உள்ளதோ அப்படியே" என்ற அடிப்படையில் வருகின்ற 24.01.2024 அன்று நடைபெறவிருக்கும் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. அசையா சொத்துக்களின் விவரம் : மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம் & சார் பதிவு மாவட்டம், டவுன் சர்வே வார்டு எண்.50, மீனாட்சிபுரம் கல்லறை முதல் சந்து, மேற்கு வரியில், டி.எஸ்.எண்.557